**செய்தி வெளியீடு எண்: 757** **நாள்:14.10.2020**

## <u>செய்தி வெளியீடு</u>

<u>பதிவுத்துறை</u>

இந்திய குடிமக்கள், வெளிநாடுகளில் வசிக்கும் இந்தியர்கள் தங்களது திருமணம் மற்றும் பிறப்பு சான்றிதழ்களை சரிபார்க்க இந்திய வெளியுறவு அமைச்சகத்தினால் தேசிய தகவல் மையம் (NIC) மூலம் உருவாக்கப்பட்டுள்ள ஈசனத் (eSanad) தளத்தின் சேவையின் மூலம் மிக எளிமையான முறையில் இணையவழி விண்ணப்பித்து சான்றொப்பம் பெற்றிடலாம். இத்தளத்தில் பதிவுத்துறையும் இணைந்து பங்களிப்பினை online மூலம் அளித்திட ஏதுவாக eSanad தளத்தில் (platform) இணைவதற்கு தமிழக அரசின் அனுமதி கிடைக்கப் பெற்று இணைய முகப்பு (portal) வழங்கப்பட்டுள்ளது.

உயர் கல்வி, வேலைவாய்ப்பு, சார்பு விசா (Dependent visa) மற்றும் வெளிநாடு செல்லும் இந்தியர்களுக்கும் / வெளிநாடுகளில் வாழும் இந்தியர்களுக்கும் மாவட்டப் பதிவாளர்கள் / சார்பதிவாளர்களால் வழங்கப்பட்ட திருமணம் மற்றும் பிறப்பு சான்றுகளை சரி பார்ப்பதற்கு eSanad சேவையினை சம்பந்தப்பட்ட அலுவலகத்திற்கு நேரடியாக சென்று சேவைபெறும் நிலை தவிர்த்து காகித உபயோகமற்ற, பணப்பரிவர்த்தனையற்ற முறையில் விரைவாக பயன் பெறலாம். பொது மக்களது சான்றிதழ்களில் சான்றொப்பத்தினை (Authenticate Attestation) மின் ஒப்பம் (Digitalized Signature) மூலம் பெற்றுகொள்ளலாம்.

இச்சேவை 12.09.2020 முதல் பதிவுத்துறையில் பயன்பாட்டிற்கு வந்துள்ளது. மேலும் eSanad.nic.in என்ற வலைதளத்தில் இச்சேவை தொடர்பான தகவல்களை பெறலாம்.

காலவிரயம் தவிர்த்து, விரைவாகவும் செலவில்லாமலும், சான்றிதழ்களின் சான்றொப்பத்தினை இச்சேவையினை பயன்படுத்தி எளிதாக பெற்று பயனடைய பொதுமக்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**வெளியீடு: இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை–9**